வெளியீடு எண்: 604.

ASSISTANT SECRET
18 SEP 1969
SOCIAL WELFARE (J. & P.) DEPT.

குருபாதம்

# சப்த விடங்கத் தலம்

தருமையாதீனம்

1969

Q23:38.2115
N69
78420

உ

சிவமயம்

# தேவாரம்

திருச்சிற்றம்பலம்

கற்ப கத்தினைக் கனகமால் வரையைக்
காம கோபனைக் கண்ணுத லானைச்
சொற்ப தப்பொருள் இருள்அறுத் தருளுந்
தூய சோதியை வெண்ணெய்நல் லூரில்
அற்பு தப்பழ ஆவணங் காட்டி
அடிய னென்னை ஆளது கொண்ட
நற்ப தத்தைநள் ளாறனை அமுதை
நாயி னேன்மறந் தென்நினைக் கேனே.

— சுந்தரர்.

திருச்சிற்றம்பலம்

வெளியீடு எண் 604.

உ
குருபாதம்

# சப்த விடங்கத் தலம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
25-ஆவது குருமகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள்**
திருவுளப்பாங்கின்வண்ணம்

திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வர
சுவாமி தேவஸ்தான
**மகாகும்பாபிஷேக விழா மலராக**
வெளியிடப்பெற்றது.

**7—9—69.**

உ

குருபாதம்

# முன்னுரை

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்றபடி புகழே ஏனை எல்லாவற்றினும் சிறந்ததாகின்றது. ஆயினும், மக்கள் பெறும் புகழ் ஓரளவிற்கே புகழ் எனப்படும். ஏனெனில், புகழ் பல திறத்தால் வருவதாயினும், ஏற்போர் விரும்பியதை இல்லை என்னாது ஈயும் ஈகையால்வரும் புகழே சிறந்தபுகழாம். "உரைப்பார் உரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன் - றீவார்மேல் நிற்கும் புகழ்" என்றார் திருவள்ளுவர். இரப்பார் இரப்பவை எல்லாவற்றையும் ஈதல் மக்களுள் எவருக்கேனும் கூடுமோ? அஃது இறைவன் ஒருவனுக்கே இயல்வதாம். அதனால், வேண்டுவார் வேண்டுவதே ஈவானாகிய அவனது புகழே பொருள்சேர் புகழாகின்றது.

ஈகையிலும் பலவகை உண்டு. அவை களில் தனக்கென ஒன்றையும் விரும்பாது எல்லாவற்றையும் பிறர்க்கு வழங்குவதையே, 'தியாகம்' என்பர். மக்களுள் அவ்வாறு வழங்கிய தியாகிகள் சிலரைப்பற்றிக் கேட்டிருக்கின்றோம். என்றாலும் தன்னையடைந்தவர்க்கு என்றும் தன்னையே வழங்கும் இறைவனே உண்மைத்தியாகன். ஆதலின், அவனை அப்பெயரிலே வைத்து ஒரு காலத்தில் திருமால் பூசைசெய்து தாம் கருதிய மகப்பேற்றைப் பெற்றார். அம்மூர்த்தியை முசுகுந்தச் சக்கிரவர்த்தி இந்திரன் வழியாகப்பெற்றுத் திருவாரூரில்கொணர்ந்து பிரதிட்டித்தான். அப்பொழுது இந்திரனது செயல் காரணமாக மற்றும் ஆறு தியாகேச மூர்த்திகள் முசுகுந்தனை அடைய, அவர்களையும் அவன் வேறு வேறு தலங்களில் பிரதிட்டித்து வழிபாடு செய்து மகிழ்ந்தான். அத்தலங்களே 'சப்த விடங்கத் தலங்கள்' எனப்படுகின்றன.

சப்த விடங்கத் தலங்கள் பற்றிய வரலாற்றை உணர்ந்து தியாகராச மூர்த்திகளை வழிபடுவோர் தாம் எண்ணியவற்றை எண்ணியவாறே பெற்று இன்புறுவர் ஆதலின் அப்பயனை அனைவரும் பெற்று உய்யவேண்டும் என்னும் கருணையினாலே, **திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்** அருள்பாலித்தவண்ணம், 'சப்த விடங்கத் தலம்' என்னும் இந்நூல், நகவிடங்கத் தலமாகிய **திருநள்ளாற்று** மகாகும்பாபிஷேக விழா மலராக வெளிவருகின்றது. அன்பர்கள் பெற்று விடங்கத்தலங்களின் பெருமையை உணர்ந்து வழிபட்டு இருமை இன்பமும் எய்துவார்களாக.

# சப்த விடங்கத் தலம்.

தென்னாடு தெய்வ மணங்கமழும் திருநாடு. எண்ணற்ற சிவாலயங்கள் இந்நாட்டைச் சிவம் பெருக்கி வாழ்விக்கின்றன. எங்கும் நிறைந்த இறைவன் இத்தலங்களில் சிவலிங்கத் திருவுருவில் எழுந்தருளியிருந்து அருள் நலம் வழங்கியருள்கின்றான். சமயாசாரியர்களும் அருளாளர்களும் ஞானிகளும் முனிவர்களும் முடியுடை வேந்தர்களும் இந்திரன் நான்முகன் திருமால் முதலான தேவர்களும் இத்தலங்களில் இறைவனை வழிபட்டு அருள் பெற்றமையை அவ்வத் தலங்களின் புராணங்களால் நாமறிகின்றோம்.

"புவனியில் போய்ப்பிறவாமையில் நாள் நாம் போக்குகின்ரேம் அவமே இந்தப்பூமி, சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித் திருப்பெருந் துறை உறைவாய் திருமாலாம், அவன் விருப்பெய்தவும் மலரவன் ஆசைப்படவும்" என்று கூறுகிறது திருவாசகம்.

இவ்வாறு இறைவன் உயிர்கள் தம்மையடைந்து உய்யும் பொருட்டு எழுந்தருளியுள்ள தலங்களில் சப்த விடங்கத்தலங்கள் சிறப்புடையன. இறைவன் தியாகேசன் எனத் திருப்பெயர் பூண்டு சோமாஸ்கந்த மூர்த்தமாய் திருமாலின் ஆன்மார்த்த மூர்த்தியாய் அவரது இதயக்கோயிலில் எழுந்தருளியிருந்து அருள் வழங்கியபின் இந்திரனல்

பூசிக்கப்பெற்று, முசுகுந்தன் என்ற மாமன்னனால் வழிபடப்பெற்றவர். அச் சிவ முகூர்த்தம் விண்ணுலகிலிருந்து மண்ணுலகு வந்தது வியத்தகு வரலாறு ஆகும். முசுகுந்தன் என்ற சோழர்குல முன்னோன் இத்தியாகேசப் பெருமானை நிலவுலகிற்குக் கொண்டு வந்தான். அம்மன்னனின் ஆழ்ந்த பக்தியுணர் விற்கு இத்திருத்தலங்கள் ஏழும் சிறந்த எடுத்துக் காட்டுக்கள். அம் மன்னன் வரலாற்றை விரிவாகக் கந்த புராணம் கூறுகிறது.

**முசுகுந்தன் வரலாறு :**

முன்னொரு காலத்தில் திருக்கயிலாயத்தில் உள்ள சோலை ஒன்றில் சிவபெருமானும் பார்வதிதேவியும் இனிது வீற்றிருந்தார்கள். அப்போது அங்கிருந்த வில்வமரங்களிலே முசுவின் (குரங்கின்) கூட்டங்கள் தங்கியிருந்தன. அவற்றுள் ஓர் ஆண்முசு, சிவபெருமான் மீதும் உமையம்மையார் மீதும் அளவிறந்த வில்வ இலைகளைப் பறித்துச் சொரிந்துகொண்டிருந்தது. சிவபெருமான் அம்முசுவின் அஞ்ஞானத்தைக் கெடுத்து அதற்கு மெய்ஞ்ஞானத்தைக் கொடுத்தருளினர். ஞானம் பெற்ற முசு, வில்வ மரத்தினின்றும் விரைந்து இறங்கிவந்து உள்ளம் நடுங்கி, உமையம்மையையும் சிவபிரானையும் அன்போடு வணங்கி, 'அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளல் வேண்டும்.' என்று விண்ணப்பம் செய்தது. சிவபெரு

மான் முசுவை நோக்கி, " நீ பிழையொன் றும் செய்யவில்லை. நாம் உவக்கும் வில்வ-பத்திரங்களைக் கொண்டு நம்மைப் பூசனை செய்தாய்; அதனுல், நீ மனுவின் வழித் தோன்றி உலகமுழுவதையும் அரசாள்வாய்" என்று அருள்புரிந்தார். முசு இறைவனை நோக்கி, "எம்பெருமானே! தேவரீரை நாடோறும் தரிசனஞ் செய்து இருத்தலாகிய அழியாத பேரின்பச் செல்வத்தை விடுத்து, நிலவுலகில் சென்று, அழியும் இயல்புடைய செல்வவலையில் அகப்பட்டால் மீட்டும் நான் எங்ஙனம் உய்வேன்" என்றது. சிவபெருமான் அதனைக் கேட்டு, "முசுவே, உன் உள்ளக் கிடக்கை நன்று! நீ இப்போது பூமியையடைந்து, அரசுபுரிந்து, பின்னர் நம்பால் வருக; இதன் பொருட்டு வருந் தற்க" என்று திருவாய் மலர்ந்தருளினுர். உடனே முசு சிவபெருமானை நோக்கி,

"அடியேன் மானுடப்பிறப்பில் மயங்கா வண்ணம் இம் முசுவின் முகத்தோடு பிறக்கும்படி அருளல் வேண்டும்" என்று வேண்டிக்கொண்டது. சிவபெருமான் அங்ஙனமே அம்முசுவிற்கு வரமருளினர். அம் முசுக்கலை திருக்கயிலாய மலையை நீங்கிப் பூமியை யடைந்து குரங்கு முகங்கொண்டு பிறந்தது. அது முசுகுந்தன் என்னும் பெயரைப் பெற்றது. இவ்வாறு தோன்றிய முசுகுந்தன் சோழநாட்டில் உள்ள கருவூரிலிருந்து அரசுபுரிந்து வந்தான்.

**முசுகுந்தன் விண்ணுலகம் செல்லுதல் :**

முசுகுந்தச் சக்கரவர்த்தி ஆட்சிபுரியுங் காலத்தில் வலன் என்னும் அவுணன் படைகளுடன் விண்ணுலகத்தை அடைந்து முற்றுகையிட்டான். இந்திரன் சிலநாள் அவனை எதிர்த்துப் போரிட்டும் அவனை

வெல்ல முடியவில்லை. உடனே இந்திரன் ஒரு தூதுவனை அனுப்பி முசுகுந்தச் சக்கிர வர்த்தியைத் தன்னிடம் அழைத்து வரும்படி அனுப்பினான். தூதுவன் நிலவுலகத்தை அடைந்து முசுகுந்தச் சக்கரவர்த்தியைக் கண்டு, இந்திரன் வேண்டுகோளைத் தெரிவித்தான். அப்போது முசுகுந்தன், தன் பெரும்படை வீரர்களோடு விண்ணுலகை அடைந்தான்; இந்திரனை வணங்கித் தேவ சேனபதியாகத் தலைமை தாங்கி, அவுணர் சேனைகளை யெல்லாம் அழித்து வெற்றி பெற்றான்.

இந்திரன் முசுகுந்தச் சக்கரவர்த்தியை அமராவதியிலுள்ள தன் கோயிலுக்குள் அழைத்துக்கொண்டு போய், "அரசர்க் கரசே! என் பகைவர்களை அழித்து என்னை விண்ணுலகத்திற்கு அரசனாக்கினாய்; வீரத்

தையும், புகழையும் தந்து, எனக்கு உற்ற துணைவனுமானாய்'' என்று பல உபசார மொழிகளைக் கூறினான். பிறகு இந்திரன் ஸ்நானம் செய்து நித்திய கர்மானுஷ்டானங்களைப் புரிந்து திருமாலினால் பூசிக்கப் பெற்ற தியாகேசப் பெருமானைப் பூசித்து வழிபட்டான்.

### முசுகுந்தன் தியாகேசனைத் தரிசித்தல் :

சிவபெருமான் உமாதேவியும் சுப்பிரமணியக் கடவுளும் ஒரு பக்கத்தில் மகிழ்ச்சியுடன் பொருந்தத் திருக்கயிலாயத்தில் எழுந்தருளியுள்ளதைப்போன்று, இந்திரன் வழிபட்ட தியாகேசப்பெருமான் அங்கு விளங்குவதை முசுகுந்தன் கண்டு பேரானந்தங்கொண்டான்; உளமுருகத் தொழுது, கூத்தாடி உரை தடுமாறி, "முன்னர்த்

திருக்கயிலாயத்தில் இந்த அருமைத் திருக் கோலத்தைக் கண்டு மகிழ்ந்தேன்; இம் மானிடப் பிறப்பினுல், மயங்கி, அவரை இது வரையில் மறந்திருந்தேனே!" என்று வருந்தினுன்.

அம்புய மலர்மேல் அண்ணல்
அச்சுதனுதி வானேர்
தம்பதம் எமக்கு நல்குந் தற்பரா
என்றே யாரும்
நம்புறு பொருட்பின் வேதம் நவின்றிட
அடைந்தோர்க் கெல்லாம்
உம்பர்தம் பதமும் ஈயும் உலகுடை
முதல்வா போற்றி!

உறைதரும் அமரர் யாரும்
உழையராய்ச் சூழ நாப்பண்
மறைபயில் பெரியோ ருற்று
வழிபட இருந்தாய் போற்றி!

அறுவகை ஐந்தும் ஆறுமாகிய
வரைப்பின் மேலாம்
இறைவனே போற்றி! போற்றி!
என்பிழை பொறுத்தி என்ருன்.

இவ்வாறு முசுகுந்தன் துதிக்கக் கண்டு மகிழ்ந்த எம்பெருமான் கருணைபுரிந்து அவனை நோக்கி, "திருமால் நம்மை அளவில்லாத காலம் அன்போடு வழிபட்டு இந்திரனிடத்தில் வைத்தான். முசுகுந்தனே! நீ நம்மை நிலவுலகத்திற்குக்கொண்டுபோய் வைத்து வழிபடுவாயாக" என்று இந்திரன் கேளாவண்ணம்கூறியருளினர். முசுகுந்தன் அதனைக் கேட்டு, "இறைவன் திருவுள்ளம் இதுவாயின் அடியேன உய்ந்தேன்" என்று வியந்தான். இந்திரன் தன் சிவார்ச்சனை முதலியவற்றை முடித்துக்கொண்டு, பின்னர் முசுகுந்தனுக்கு விருந்து செய்வித்து, ஆடையாபரணங்களையும், மணிகளையும், முத்துக்

களையும், தெய்வப் படைக் கலங்களையும் அளித்து, "இன்னும் உனக்கு வேண்டியதைக் கேள்" என்று கூறினன். முசுகுந்தன் "இந்திரனே! நீ பூசைசெய்கின்ற கடவுளை யான் பூவுலகத்திற்குக் கொண்டுபோய் வைத்துப் பூசிக்க எனக்கு அப்பெருமானை அன்போடு கொடுப்பாயாக" என்றான்.

## இந்திரன் தியாகராசப் பெருமானின் வரலாறு கூறல்:

இந்திரன் முசுகுந்தனைப் பார்த்து, "ஒரு காலத்தில் திருமால் மகப்பேறின்மையால் சிவபெருமானையே தஞ்சமென்று தவம் செய்தார். சிவபெருமான் மகிழ்ந்து. 'நீ வேண்டிய வரம் யாது?' என்று வினவினர். திருமால், "எம்பெருமானே! அடியேனுக்கு குறைவற்ற ஆயுளையும், காத்தல் தொழிலையும், திருமகளோடு இருக்கும் வளத்தையும்

தந்தருளினீர்; ஆனால் எனக்கு மகப்பேறு மாத்திரம் இல்லை. அதனைத் தந்தருளல் வேண்டும்" என்று வேண்டினார். சிவபெருமான் மகிழ்ந்து "உனக்கு மகப்பேறு அருளினோம்" என்று அருள்புரிந்தார். அப்போது திருமால் உமாதேவியாரை வணங்கி வழிபடவில்லை. உமாதேவியார் திருமாலை நோக்கி, "நீ என்னை அவமதித்தாய்; அதனால் நீ எம்பெருமானிடத்தும் அன்பு கொண்டவன் ஆகமாட்டாய்; நீ பெறும் மகனும் எம்பெருமான் கோபத்தால் விரைவில் அழிக" என்று சபித்தார். பிறகு உமாதேவியார் இறைவனை நோக்கி, "உயிர்க்குயிராகிய கடவுளே! மீண்டு செல்வோம்; வருக" என்று கூறி, அழைத்துக்கொண்டு போயினார்.

திருமால் அதனைக் கேட்டு மிகவும் வருந்தி, சிவபெருமான், உமாதேவியார், குமரக்கடவுள் ஆகிய மூவரையும் ஒருங்கே

கொண்ட சோமாஸ்கந்த மூர்த்தியின் திரு வுருவத்தை அமைத்து முறைப்படி வழி பட்டார்; பிறகு பல்லாயிரங்கோடி ஆண்டு கள் கடுந்தவம் இயற்றினர். அத் தவத் தைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான் உமா தேவியாரோடு தோன்றியருளினர். திரு மால் ஓடிச்சென்று அம்மையாரின் திருவடி களை முதலில் வீழ்ந்து வணங்கிப் பிறகு எம்பெருமானை வணங்கினர். இருவரையும் வேதங்கள் கூறித் துதித்தார். சிவபெரு மான் அவருக்கு நல்லருள்புரியத் திருவுளம் கொண்டு, "உமையே! நீ இவனுக்கு அருள் புரிவாயாக" என்றார். தேவியார் திருமாலை நோக்கி, எம்பெருமான் கூறிய சாபமும் பிழைபட மாட்டா. உனக்குத் தோன்றும் மகன் எம்பெருமானின் நெற்றிக்கண்ணின் தீயினல் அழிவான்; பின்னர் உயிர் பெற் றெழுவான். என்று கூறியருளினர். சிவ

பெருமானும் "அவ்வாறே யாகுக" என்று கூறி உமாதேவியாரோடு மறைந்தருளினர். திருமால் தம் இருப்பிடத்தை அடைந்தார். மன்மதனைத் திருமகனுகப் பெற்ருர்.

திருமால், முன்பு தாம் பூசித்து அன்போடு வழிபட்ட சோமாஸ்கந்த மூர்த்தியைத் தம்முடைய மார்பில் வைத்துக் கொண்டு பாற்கடலிலே பல காலம் பள்ளி கொண்டிருந்தார்.

## இந்திரன் சோமாஸ்கந்த மூர்த்தியைப் பெறுதல் :

அக்காலத்தில் வாற்கலி என்னும் அவுணன் என்னையும் தேவர்களையும் தோற்கடித்தான். நான் திருமாலிடம் சென்றேன். அப்போது திருமால், திருப்பாற் கடலில், தாம் வழிபட்ட சோமாஸ்கந்த மூர்த்தியைத்

தம் மார்பில் வைத்தவண்ணம் துயில்கொண் டிருந்தார். நான் அவரை நோக்கி, என்னைக் காத்தருளும்படி வேண்டினேன். உடனே, திருமால் "என்மார்பிலிருக்கும் சோமாஸ்கந்த மூர்த்தியை வழிபட்டு உன் தீவினையைப் போக்கிக் கொள்க" என்று அம் மூர்த்தியைத் தம் மார்பினின்றும் எடுத்து என் கரத்தில் அளித்தார். நான் அம்மூர்த்தியை என்தலைமேல் அன்போடு தாங்கினேன். அதன்பின் திருமால், பாற்கடலை விட்டு நீங்கிச் சிவபெருமான் ஆனந்த நடனம்புரியும் தில்லையம்பதியிலுள்ள கனக சபையை அடைந்து, எம்பெருமான் திரு முன்னே வீழ்ந்து, இறைஞ்சி மெய்ம்மயிர் சிலிர்க்க ஆனந்தக் கண்ணீர் சொரிய பேரின்பத்தில் நெடிதுநாள் திளைத்தார். அதன்பின்பு, வாற்கலியை எதிர்த்துப் போரிட்டுக் கொன்றார். பிறகு நான் விண்

ணுலகத்திற்கு மீண்டு வந்து அன்றுமுதல் இன்றுவரையில் திருமால் அளித்தசோமாஸ் கந்த மூர்த்தியை வழிபட்டுவருகிறேன். அரசர்க்கரசே! இந்த மூர்த்தியை உனக்குத் தருவதில் திருமாலுக்கு விருப்பமிருந்தால் நான் தருகிறேன்" என்று கூறினன்.

முசுகுந்தன் திருப்பாற்கடலையடைந்து, திருமாலை வணங்கி நின்று சோமாஸ்கந்த மூர்த்தியைத் தனக்குத் தரும்படி வேண்டுதலும், திருமால் முசுகுந்தனின் வேண்டுகோளுக் கிணங்கி, "நாம் இந்திரனிடத்தில் வைத்துள்ள தியாகராஜமூர்த்தியை பூமியிற் கொண்டு போய்ப் பூசித்து வழிபடுவாயாக" என்று கூறினர். முசுகுந்தன் நன்றென்று திருமாலிடம் விடைபெற்றுக் கொண்டு இந்திரனிடம் திரும்பி வந்து, திருமால் கூறியதைத் தெரிவித்துக்கேட்டான். இந்திரன், பசுவைப் பிரியும் கன்றுபோல் மனந்

78420

தளர்ந்து இரங்கிப் புலம்பி, மூர்த்தியைக் கொடுக்க மனமின்றிச் சோமாஸ்கந்த மூர்த்தியைப் போன்ற ஆறு மூர்த்திகளைத் தெய்வ தச்சனைக் கொண்டு செய்வித்து முசுகுந்தனிடம் ஒவ்வொன்றாகக் கொடுத்தான். முசுகுந்தச் சக்கிரவர்த்தி அவற்றை வாங்கி, அம்மூர்த்திகள் தியாகராசப் பெருமானைப் போல இருந்தும் தனக்கு ஒன்றும் சொல்லாதிருந்தமையால் வஞ்சனை என்று அறிந்து, "இவர் அவர் அன்று" என்று ஆறு தரமும் கூறினான். இந்திரன் கடைசியாகத் திருப்பாற்கடலில் திருமால் மார்பில் பொன்னூஞ்சலிலே ஆடிய சோமாஸ்கந்த மூர்த்தியைக் கொண்டுவந்து, "இவர் அவராமோ?" என்று உரைக்க, அப்போது சோமாஸ்கந்த மூர்த்தி இந்திரன் அறியா வண்ணம் முசுகுந்தன் முகத்தை நோக்கி "நாம் உன்பால் வந்தோம். இனி நம்மைப்

Q23:38 N

பூவுலகத்திற்குக் கொண்டுபோய் வழிபடு வாயாக" என்று அருள் செய்தார். முசுகுந்தன் பெருமகிழ்ச்சி யடைந்து துதித்து வணங்கி, "அரசே! இவரே திருமாலின் வழிபாட்டை ஏற்றிருந்தவர்; இவரைத் தருக" என்று வாங்கினன். இந்திரன் முசுகுந்தனை நோக்கி, "இவரை முன்னர் யான் அளித்த அறுவரோடு நிலவுலகத் திற்குக் கொண்டுபோய்த் திருவாரூர் முதலாகிய சிவத்தலங்களில் வைத்துப்பூசிப்பாய்" என்று கூறி விடைகொடுத்து அனுப்பினன்.

## முசுகுந்தன் பூவுலகு அடைதல் :

முசுகுந்தன் இந்திரனிடத்தில் விடை பெற்றுக் கொண்டு நிலவுலகை அடைந்தான். திருவாரூரிலே வன்மீகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் பூங்கோயிலில், திருமால் பூசித்த தியாகராச மூர்த்தியை

விதிப்படி முசுகுந்தன் தாபித்தான். மற்றை ஆறு தியாகராச மூர்த்திகளையும் திருநாகைக் காரோணம், திருநள்ளாறு, திருக்காருயில், திருக்கோளரியூர் (திருக்கோளிலி) நிருவான்மியூர் (திருவாய்மூர்) திருமறைக்கரடு (வேதாரணியம்) என்னும் சிவத்தலங்களில் ஒரே நாளில் தாபித்து விதிப்படி வழிபாடு செய்வித்தான்.

முசுகுந்தன் தியாகேசரை எழுந்தருள்வித்த இத்தலங்கள் '**சப்தவிடங்கத் தலங்கள்**' எனப்படுகின்றன. பிறகு திருவாரூர்த் தியாகராசப்பெருமானுக்குத் திருவிழா நடத்தக் கருதினன். அப்போது, இந்திரன் பூசித்த கடவுளை முசுகுந்தனுக்குக் கொடுத்த பாவத்தால் விண்ணுலக அரசை இழந்து புலையன் வடிவு தாங்கி நிலவுலகத்தை அடைந்து "தியாகராசப்பெருமானின் திரு

விழாவைத் தரிசித்தற்கு யாவரும் வருக" என்று யானைமீதேறித் திருவாரூர் வீதிகளி லெல்லாம்முரசு அறைந்து பணிசெய்தான். முசுகுந்தன் தியாகராசப் பெருமானுக்குச் சிறப்பாகத் திருவிழா நடத்தினன்; மற்றை சிவத்தலங்களில் தாபித்த தியாகேச மூர்த்தி களுக்கும் திருவிழாவைச் செய்வித்து நில வுலகத்தைச் சிறப்புற அரசுபுரிந்து வந் தான். இந்திரன் பல்லாண்டுகள் தியாக ராசப் பெருமானின் திருவிழாக் கண்டு வழி பட்டான். பிறகு தவம் செய்து புலை வடிவு நீங்கிப் பழைய தேவ வடிவு பெற்று விண்ணுலகை அடைந்து இழந்த செல்வங் களைப் பெற்று இருந்தான்.

சப்தவிடங்கத் தலங்களில் தியாகேசர் ஏழுவகைத் திருப்பெயர்களைப் பூண்டு ஏழு வகைத் திருநடங்களைச்செய்தருளுகின்றார்.

திருவாரூர் வீதிவிடங்கர் - அஜபா நடனம்
திருக்கோளிலி, அவனிவிடங்கர் - பிரமர நடனம்
திருநள்ளாறு, நகவிடங்கர் - உன்மத்த நடனம்
திருநாகைக்காரோணம், சுந்தரவிடங்கர் - பாராவார தரங்க நடனம் - வீசி நடனம்
திருக்காருயில், ஆதிவிடங்கர் - குக்குட நடனம்
திருவாய்மூர், நீலவிடங்கர் - கமல நடனம்
திருமறைக்காடு, புவனிவிடங்கர் - ஹம்சபாத நடனம்.

திருவாரூர்த் தியாகேசர் ஆடும் நடனம் அஜபா நடனம் எனப்பெறும். ஜபிக்கப் பெருத நடனம் என்பது இதன்பொருள். மந்திரங்களை ஓதும் பல முறைகளில் மானசீகமாக உச்சரிப்பது ஒருமுறை. இந்த முறையில் திருமால் ஸ்ரீ தியாகராசப் பெருமானைத் தமது மார்பகத்தில் வைத்துப்

பூசித்த ஞான்று மானசீகமாகப் பெருமானது திருப்பெயரை உச்சரித்த காலத்தில் நடனம் ஆடிய முறையையே இது குறிக்கின்றது. உள் மூச்சு வெளிமூச்சுக்களால் மார்புக்கூடு ஏறி இறங்குவதாலும், அம்மூச்சு உள்ளும் புறமும் முன்பின்னாக இயங்குவதாலும் அஜபா நடேசராகத் திருமாலின் இதய கமலத்தில் அமர்ந்து ஸ்ரீ தியாகராசர் மேலும் கீழுமாக ஏறியிறங்கியும் முன்னும் பின்னுமாகச் சென்று வந்தும் ஆடிய ஆட்டம் இப் பெயர் பெறுவதாயிற்று. இவ்வரிய காட்சியினை இன்றும் திருவாரூரையடைந்து ஸ்ரீ தியாகராசப் பெருமான் ஆடும் காலங்களில் கண்டுகளிக்கலாம். திருநள்ளாற்றில் உன்மத்த நடனத்தைக் காணலாம். இந்த நடனம் பித்தன் தலைசுற்றி ஆடுவதுபோல் நிகழ்வதொன்றாகும். நாகையில் பாராவார தரங்க நடனத்தைக் காணலாம். இது கடல் அலையின் அசைவை ஒத்துள்ளது. திருக்

காருயிலில் குக்குட நடனத்தைக் காணலாம். இது கோழியின் ஆட்டத்தை ஒத்தது. திருக்கோளிலிப் பதியில் ஸ்ரீ தியாகராசப் பெருமான் பிரமர நடனம் ஆடுகின்ருர். வண்டு மலர்களுக்குள் குடைந்து ஆடிச் செல்வதுபோன்ற காட்சியை இந் நடனத்தில் காணலாம். திருவாய்மூரில் நிகழ்வது கமல நடனம்; நீர்நிறைந்த தடாகத்தே ஒற்றைத் தாளில் நிற்கும் தாமரைப்பூ காற்ருல் தள்ளுண்டு மெல்லென ஆடுவது போன்ற இனிய காட்சி இங்குத்தான் உள்ளது. திருமறைக் காட்டில் ஹம்சபாத நடனம் நிகழ்கின்றது. இது அன்னப் பறவை அடிபெயர்த்து வைத்து ஆடுவது போன்ற தோற்றத்தினை உடையது.

இவ்வாறு எழுவகைத் திருநடனங்களோடும் எழுவகைத் திருப்பெயர்களோடும் இறைவன் தியாகேசனுய் எழுந்தருளியிருந்து அருள்வழங்கும் தலங்களில் ஒன்று இத் திருநள்ளாறு.

**திருநள்ளாறு :**

சப்தவிடங்கத் தலங்களில் ஒன்ருய் சைவம்காத்த தனிப்பெருந் தலமாய் விளங்குவது திருநள்ளாறு. போகமார்த்த பூண்முலையாள் என்னும் பச்சைத் திருப்பதிகம் இத்தலப்பதிகம் என்பதொன்றே இத்தலத்தின் சிறப்பை விளக்கப் போதுமானது. மூவர் தேவாரப் பாடல்களையும் உடையதாய் விளங்குவது இத்தலம். நளன் என்னும் நிடதநாட்டு மன்னனைப் பற்றியிருந்த சனி பகவான் இத்தலத்து இறைவனை வழிபட்டதால் விலகினுர். நளன் நீராடிய திருக்குளம் நள தீர்த்தம் என வழங்கப்படுகிறது நளன் நள்ளாற்றிறைவனை வணங்கி நல்லருள் பெற்ருன்.

'நளன் கெழுமிநாளும் வழிபாடு செய் நள்ளாறே' என்பது திருமுறைவாக்கு.

சனிப்பெயர்ச்சி நாட்களில் பல லக்ஷக்கணக்கான மக்கள் இத்தலத்திற்கு வந்து வழிபாடு செய்வர். இவ்வாறு மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் சிறந்த இத்தலத்தின் மகா கும்பாபிஷேக விழா 7—9—69 ஞாயிறு காலை நிகழ்கிறது. அன்பர்கள் தரிசித்து இன்புறுவார்களாக.

திருச்சிற்றம்பலம்

திருவாரூர் :

பையஞ் சுடர்விடு நாகப் பள்ளிகொள்வா
னுள்ளத் தானும்
கையஞ்சு நான்குடை யானைக் கால்விர
லாலடர்த் தானும்
பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப் புகழ்புரிந்
தார்க்கருள் செய்யும்
ஐயஞ்சி னப்புறத் தானும் ஆரூர் அமர்ந்த
அம்மானே.

— அப்பர்

திருக்கோளிலி :

நீள நினைந்தடியேன் உமை நித்தலும்
கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள் வாடி
வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில
நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்
தரப்பணியே.
— சுந்தரர்.

திருநள்ளாறு :

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும்
பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல்
பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண
வாடையின் மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது
நள்ளாறே

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கிய
தாழ்சடையன்
நண்புநல்லார் மல்குகாழி ஞானசம்
சம்பந்தனல்ல
பண்புநள்ளா றேத்துபாடல் பத்துமிவை
வல்லார்
உண்புநீங்கி வானவரோ டுலகிலுறைவாரே
— சம்பந்தர்.

திருநாகைக்காரோணம் :

இலவவிதழ் வாயுமையோ டெருதேறிப் பூதம்
இசைபாட இடுபிச்சை கெச்சுச்சம் போது
பலவகம்புக் குழிதர்வீர் பட்டோடு சாந்தம்
பணித்தருளா திருக்கின்ற பரிசென்ன
படிறே
உலவுதிரைக் கடல்நஞ்சை அன்றமரர்
வேண்ட
உண்டருளிச் செய்ததுமக் கிருக்
கொண்ணு திடவே

Q23:38.2115
N69



கலவுமயி லியலவர்கள் நடமாடுஞ் செல்வக்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே
— சுந்தரர்.

திருக்காறுயில் :

நீரானே நீள்சடை மேலொர் [நிரைகொன்றைத்
தாரானே தாமரை மேலயன் றன்றொழும்
சீரானே சீர்திக ழுந்திருக் காறுயில்
ஊரானே யென்பவ ரூனமி லாதாரே.
— சம்பந்தர்.

திருவாய்மூர் :

திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி யடைப்பித்தாருந் நின்றூர்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே.
— அப்பர்

78420

திருமறைக்காடு :

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான்
கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெலாம்
ண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட்டுறையும் மணாளன் தானே.

— அப்பர்.

திருச்சிற்றம்பலம்

ஞானசம்பந்தம் அச்சகம், தருமபுரம்.

உ

குருபாதம்

# " ஞானசம்பந்தம் "

## அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள்இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்துத் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ. 3—00] [வெளிநாடு ரூ 4—00

செயலாளர்,
'ஞானசம்பந்தம்' காரியாலயம்,
தருமையாதீனம், மாயூரம் அஞ்சல்,
தஞ்சை மாவட்டம்